படம் 1




1. முதலில் சண்டையைத் தொடங்கியது யாராக இருக்கும்?
2. எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்? (படத்தில் பல் சிரித்துக் கொண்டும் நாக்கு வருத்தமாகவும் இருக்கிறது)
3. பல் நாக்கிடம் என்ன சொல்லி வம்புக்கு இழுத்தது?

கரும்பலகையில்: நாக்கை வம்புக்கு இழுத்தது. அது நாக்கிடம், “ஏ நாக்கே! நானே உன்னை விட உயர்ந்தவன்” என்றது

படம் 2

இனிப்பு



கசப்பு




1. இது என்ன ருசி? (இனிப்புகளைக் காட்டி)
2. இது என்ன ருசி? (கசப்புகளைக் காட்டி)
3. இது இனிப்பு, இது கசப்பு என்று உனக்கு எவ்வாறு தெரிகிறது?
4. பல் கேட்ட கேள்விக்கு நாக்கு என்ன பதில் சொல்லியிருக்கும்?
5. இதையெல்லாம் கடித்து நொறுக்குவது யார்?

(தேவைப்பட்டால், ஆசிரியர் ஒரு சிறிய உரையாடலை நிகழ்த்தலாம் – ஒரு உணவுப்பொருளைப் பல்லில் வைத்தால் அதன் சுவையை உணர முடியுமா? அல்லது நாக்கில் வைத்தால் உணரமுடியுமா? முடிந்தால் ஏதேனும் ஒரு உணவைக் கொடுத்து சுவைக்க வைக்கலாம்- ஒரு குழந்தை கண்ணை மூட, வேறொரு குழந்தை ஒரு வெல்லக்கட்டி / புளியை முதலில் பல்லிலும் பிறகு நாக்கிலும் வைக்க வேண்டும்)

கரும்பலகையில்: "நான் தான் பல ருசிகளைத் தெரிய வைக்கிறேன்" என்றது நாக்கு

"நான் தான் இவற்றைக் கடித்து நொறுக்குகிறேன்" என்றது பல்

படம் 3



1. இந்த இருவரில் யார் அளவில் பெரிதாக இருக்கிறார்?
2. நாக்கு பல்லிடம் என்ன சொல்லியிருக்கும்?

கரும்பலகையில்: நாக்கு, “நான் உன்னை விட நீளமானவன்” என்று கூறியது

படம் 4



1. இந்தப் படத்தில் என்ன பார்க்கிறீர்கள்?
2. பல் நாக்கிடம் என்ன சொல்லியிருக்கும்?

கரும்பலகையில்: நான் உன்னைக் கடித்து விடுவேன் என்று கூறியது



படம் 5

(இந்த படத்தைக் காட்டி)

1. அவர் என்ன செய்கிறார்?

கரும்பலகையில்: திரும்பிப் பார்க்கிறார்

கதை கூறல்: மறுபடியும் நாக்கு,

“உன்னைத்தான்டா” என்றது.



படம் 6

1. அவர் என்ன செய்கிறார்?
2. வாயில் குத்தியதால் என்ன ஆனது?

கரும்பலகையில்: வாயில் ஓங்கி குத்துகிறார்

பல் எல்லாம் ஒடஞ்சி கீழ விழுது

படம்




1. பல் என்ன பண்ணுது?
2. நாக்குகிட்ட என்ன சொல்லியிருக்கும்?

கரும்பலகையில்: "இனிமேல் நான் வம்புக்கு வரமாட்டேன். அவரிடம் மன்னிப்பு கேட்டு அனுப்பு"

கதை கூறல்: நாக்கு அவரிடம் மன்னிப்பு கேட்டதும் அந்த மனிதர் சென்றுவிட்டார்

படம் 8



1. படத்தில் என்ன பார்க்கிறீர்கள்?

கரும்பலகையில்: இருவரும் நண்பர்கள் ஆகிறார்கள்.